# கொறோனாத் தொற்று மற்றும் தடுப்பூசி பற்றிய நோர்வே பொதுசுகாதார நிறுவனத்தின் (FHI) புதுப்பிக்கப்பட்ட தகவல்கள், வாரம் 7, 2022.

## கர்ப்பிணிப் பெண்களுக்கான கொறோனாத் தடுப்பூசி பற்றிய புதிய அறிவுறுத்தல்.

அனைத்து கர்ப்பிணிப்பெண்களும் அடிப்படை மற்றும் எதிர்ப்புச் சக்தியை நீடிப்பதற்கான (booster) தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பரிந்துரைக்கப் படுகிறது. இது கர்ப்பக்காலத்தின் முதல்மாதங்களுக்கும் ஏற்புடையதாகும்.

தடுப்பூசி தாயைப் பாரிய சுகவீனத்திலிருந்து பாதுகாப்பதுடன் கருவிலுள்ள குழந்தைக்கும் பிறபொருளெதிரி கடத்தப்படுவதால் பிறக்கும் குழந்தையும் கொறோனாவுக்கான எதிர்ப்புச்சக்தியுடன் பிறக்கும். முழுமையான தடுப்பூசி பெற்ற கர்ப்பிணிப்பெண்கள் சுவாசப்பிரச்சனைகள் மற்றும் குறைமாதப் பிரசவங்களுக்கு உள்ளாகும் அபாயம் வெகுவாகக் குறைகிறது.

https://www.fhi.no/publ/informasjonsark/koronavaksine-til-gravide/

https://www.fhi.no/nettpub/coronavirus/befolkningen/rad-for-gravide-og-ammende/?term=&h=1#vaksinasjon-av-gravide

## கொறோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கான தாமதமான பக்கவிளைவுக்கான சாத்தியக்கூறுகள் மிக அரிது!

இற்றைக்கு ஓர் ஆண்டுக்கு முன்னதாக கொறோனவுக்கான முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டது. இதுவரையில் 11 மில்லியன் (1,1 கோடி) தடுப்பூசிகள் நோர்வேயிலும் 10 பில்லியனுக்கும் (ஆயிரம் கோடி) அதிகமாக உலகளவிலும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுபவத்தின் அடிப்படையில் பிந்திய அல்லது தாமதமான பக்கவிளைவுகளுக்கான சாத்தியக்கூறுகள் மிகமிக அரிதென அறியப்பட்டுள்ளது. தடுப்பூசி பெற்று ஆறு வாரங்களின்பின் ஏற்படும் பக்கவிளைவுகள் தாமதமான அல்லது நீண்டகாலப் பக்கவிளைவுகள் எனக் கூறப்படுகிறது.

https://www.fhi.no/nyheter/2022/lav-sannsynlighet-for-langtidsbivirkninger-etter-koronavaksinasjon/

## நோவாவக்ஸ் (Novavax / Nuvaxovid) என்ற தடுப்பூசி பற்றிய தகவல்

நோவாவக்ஸ் என்ற தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது நோர்வேயில் பத்தாம் வாரத்திலிருந்து கிடைக்கும். இது எந்தவகையிலும் mRNA தடுப்பூசிகளைவிடச் மேம்பட்டதல்ல என பொது சுகாதார நிறுவனம் (FHI) தெரிவிக்கிறது. ஆயினும்  ஏதாவதொரு காரணத்தால் mRNA தடுப்பூசியை எடுக்க விரும்பாதவர்கள், இவ்வகைத் தடுப்பூசியை விரும்பின் தத்தமது நகராட்சிகளைத் தொடர்புகொள்வதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

https://www.fhi.no/publ/informasjonsark/vaksine-mot-koronavirus---novavax/

https://www.fhi.no/sv/vaksine/koronavaksinasjonsprogrammet/koronavaksine/